CCE RR/PR/NSR/NSPR(B)/777/3006

**B**

# ಮಾರ್ಚ್/ಏಪ್ರಿಲ್ 2024 ರ ಪರೀಕ್ಷೆ - 1

# MARCH/APRIL 2024 EXAMINATION-1

ಒಟ್ಟು ಮುದ್ರಿತ ಪುಟಗಳ ಸಂಖ್ಯೆ : 12 ]
Total No. of Printed Pages : 12 ]

ಒಟ್ಟು ಪ್ರಶ್ನೆಗಳ ಸಂಖ್ಯೆ : 45 ]
Total No. of Questions : 45 ]

**CCE RR/PR/ NSR/NSPR**
**Reduced Syllabus**

Question Paper Serial No.

**ಸಂಕೇತ ಸಂಖ್ಯೆ : 10-T**
**Code No. : 10-T**

## ವಿಷಯ : ಪ್ರಥಮ ಭಾಷೆ — ತಮಿಳು

## Subject : First Language — TAMIL

(ಶಾಲಾ ಪುನರಾವರ್ತಿತ ಅಭ್ಯರ್ಥಿ / ಖಾಸಗಿ ಪುನರಾವರ್ತಿತ ಅಭ್ಯರ್ಥಿ / ಎನ್.ಎಸ್.ಆರ್. / ಎನ್.ಎಸ್.ಪಿ.ಆರ್.)
(**Regular Repeater / Private Repeater / NSR / NSPR**)

ದಿನಾಂಕ : 25. 03. 2024 ] [ Date : 25. 03. 2024
ಸಮಯ : ಬೆಳಗ್ಗೆ 10-15 ರಿಂದ ಮಧ್ಯಾಹ್ನ 1-30 ರವರೆಗೆ ] [ Time : 10-15 A.M. to 1-30 P.M.
ಗರಿಷ್ಠ ಅಂಕಗಳು : 100 ] [ Max. Marks : 100

**Cut here/ಇಲ್ಲಿ ಕತ್ತರಿಸಿ**

**பொதுவான குறிப்புகள் :**

1. இந்த வினாத்தாள் வினாக்கள் 45-ஐ கொண்டுள்ளது.
2. இந்த வினாத்தாள் பின்புறமாக மூடி வைக்கப்பட்டுள்ளது (Sealed by reverse jacket) நீங்கள் தேர்வு ஆரம்பிக்கும் பொழுது **வலக்கைப் பக்க ஓரத்தை பிரித்து திறக்க வேண்டும் (அம்புக்குறியிட்டு காட்டியுள்ளபடி). இடது பக்க ஓரத்தை பிரிக்கக்கூடாது.** வினாக்களை உள்ளடக்கிய அனைத்துப் பக்கங்களும் சரியாகவும் பிரிக்கப்படாமலும் உள்ளதா என சரிபார்க்கவும்.
3. வினாக்களில் கொடுக்கப்பட்டுள்ள அறிவுரைகளைப் பின்பற்றவும்.
4. வலதுகைப் பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ள எண்கள் அதிகபட்ச மதிப்பெண்ணைக் குறிக்கிறது.
5. மாணவர்கள் வினாத்தாளைப் படிப்பதற்கென கூடுதலாக 15 நிமிடங்கள் தரப்பட்டுள்ளன.
6. மாணவர்கள் தங்கள் தேர்வு அனுமதிச்சீட்டில் (Admission Ticket) உள்ள குறியீடும், வினாத்தாளின் குறியீடும் ஒரே மாதிரியாக உள்ளதா என்பதை சரிபார்க்கவும்.

இங்கிருந்து பிரிக்கவும்

**TEAR HERE TO OPEN THE QUESTION PAPER**
இங்கு ஒட்டியுள்ள பகுதியைப் பிரித்துத் திறக்கவும்

**25. 03. 2024**

**Tear here**

**I. கொடுக்கப்பட்டுள்ள நான்கு விடைகளுள் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் எழுதுக :** **6 × 1 = 6**

1. கிரிக்கெட் பந்தயத்தில் இந்தியா வென்றது

(A) பொருளாகுபெயர்

(B) இடவாகுப்பெயர்

(C) காலவாகுப்பெயர்

(D) சினையாகுப்பெயர்

2. சொற்கள் பல அடுக்கி வருவது

(A) சீர் (B) அடுக்குத்தொடர்

(C) இரட்டைக்கிளவி (D) இடைச்சொல்

3. போர்தொடுக்க வந்தவனை எதிர் கொள்ளுதல்

(A) வெட்சி (B) வஞ்சி

(C) காஞ்சி (D) உழிஞை

4. செய்யுளில் ஐந்து சீர்களை கொண்டது

(A) அளவடி

(B) சிந்தடி

(C) நெடிலடி

(D) அளவடி

5. செய்யுளைச் சொல்லால் அழகு செய்வது

(A) அணி

(B) சொல்லணி

(C) பொருளணி

(D) வேற்றுமையணி

6. ஓடி விழுந்தான் ஓடி என்பது

(A) பெயரெச்சம்

(B) வினைமுற்று

(C) வினையெச்சம்

(D) பெயர்ச்சொல்

**II. முன்னுள்ளதைப் போன்று பின்னுள்ளதை ஏற்ற சொல்லால் நிரப்புக :** **4 × 1 = 4**

7. பிரம்படி கொடுத்தவன் : பாண்டிய மன்னன் ;

   பிட்டுக்கு மண் சுமந்தவன் : ........................... .

8. பகலில் ஒளி தருவது : சூரியன்;

   இரவில் ஒளி தருவது : ........................... .

9. குறை குடம் : கூத்தாடும்;

   நிறை குடம் : ........................... .

10. ஆக்கம் என்பது : செல்வம்;

    மாசு என்பது : ........................... .

**III. ஒரு தொடரில் விடை தருக :** **7 × 1 = 7**

11. இறைவன் ஆனந்த மாக்கடலாவது எப்போது ?

12. நல் அமுது என்று பாரதிதாசன் எதனைக் கூறுகிறார் ?

13. எவ்வெவற்றை நீக்கி வாழ்வது அறமாகும் ?

14. திரிகடுகத்தின் ஆசிரியர் யார் ?

15. நீ எத்தகைய எண்ணத்தைக் கூடு என்கிறார் நாமக்கல் கவிஞர் ?

16. இலக்கணம் என்றால் என்ன ?

17. பெண்கள் எவை போயின என்று கும்மியடித்தனர் ?

**IV. மூன்று அல்லது நான்கு தொடர்களில் விடை தருக : 10 × 2 = 20**

18. பெண்கள் பாரினில் எதை நடத்த வந்தனர் என்று பாரதியார் குறிப்பிடுகிறார் ?

19. பாணன் தான் கொண்டு வந்த பரிசுப்பொருள் யாதென்பதற்குக் கூறிய முதல் மூன்று சொற்கள் யாவை ?

20. அறவழியில் நடக்கும் மாந்தர்களின் பண்புகள் யாவை ?

21. காளைகளுக்குச் சொல்வது போல் மக்களுக்குப் பட்டுக் கோட்டையார் கூறுவது என்ன ?

22. பொருந்தா இயல்புடைய இரண்டு உயிர்கள் யாவை ?

23. மகன் தந்தைக்குச் செய்யும் உதவி யாது ?

24. C.F.C. ஓசோனில் ஏற்படுத்தும் பாதிப்பு யாது ?

25. இளைஞன் தன்னை எதைப்போல் வழிநடத்திக் கொள்ள வேண்டும் என்று வைரமுத்து கூறுகிறார் ?

26. உரிச்சொல் என்றால் என்ன ? அதன் வகைககள் யாவை ?

27. வெண்பாவின் பொது இலக்கணத்தை எழுதுக.

**V. ஐந்து அல்லது ஆறு தொடர்களில் விடை தருக : 4 × 3 = 12**

28. உழவுத்தொழிலின் உயர்வையும் உழவர்களின் உயர்வையும் வள்ளுவர் எவ்வாறு குறிப்பிடுகிறார் ?

29. சிறு பஞ்சமூலம் நூலின் சிறப்பினை விளக்குக.

30. பூமியின் வெப்பம் அதிகரிப்பதால் ஏற்படும் பாதக விளைவுகளை கூறுக.

31. இளைஞன் எப்போது பாறையில் மோதிய பந்தாய் திரும்பி வர நேரும் ? அதன் விளைவு யாது ?

**VI. குறிப்பு வரைக :** **2 × 3 = 6**

32. புறநானூறு

33. புரட்சிக்கவி பாரதிதாசன்

**VII. கீழ் வரும் அணியைச் சான்றுடன் விளக்குக :** **1 × 3 = 3**

34. பிறிதுமொழிதல் அணி சான்றுடன் விளக்குக.

**VIII. இடம் சுட்டிப் பொருள் விளக்குக :** **3 × 3 = 9**

35. ''பால் வார்த்தாலும்
விஷம் குறைக்காது பாம்பு''

36. ''சென்னையிலுள்ள எந்த விடுதியில் இந்த வடை தயாரிக்க பட்டதோ? மிகவும் சுவையாக இருக்கிறதே''.

37. ''அவர்கள் வாழ்வில் ஒருபோதும் வெறுப்பு கொள்ள மாட்டார்கள்''.

**IX. கீழ் வரும் பழமொழியை விளக்குக : 1 × 3 = 3**

38. ''எறும்பு ஊரக் கல்லும் தேயும்''.

*அல்லது*

''ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா''.

**X. அடிபிறழாமல் எழுதுக : 1 × 4 = 4**

39. ''சோதியாய்த் தோன்றும் .....'' எனத் தொடங்கும் திருவாசகப் பாடல்.

*அல்லது*

''இனிமைத் தமிழ் ..... '' எனத் தொடங்கும் பாடல்.

**XI. எட்டு அல்லது பத்து தொடர்களில் விடை தருக : 2 × 4 = 8**

40. சேதுப்பிள்ளையவர்கள் 'பெருந்தகையர்' என்ற சொல்லைப் பயன்படுத்திய உரையாடலை விளக்குக.

41. தீப்பெட்டி ஆபீஸிற்குச் சென்று வரும் குழந்தைகள் பற்றி கி.ராஜநாராயணன் கூறியன யாவை ?

*அல்லது*

இலட்சியம் பற்றி வைரமுத்து கூறும் கருத்துக்களைச் சுருக்கி வரைக.

**XII. கீழ்வருவனவற்றை விளக்கி எழுதுக : 1 × 4 = 4**

42. ''பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்
பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்
எட்டும் அறிவினில் ஆணுக்கிங்கே பெண்
இளைப்பில்லை காணென்று கும்மியடி''.

*அல்லது*

''பள்ளம் மேடுள்ள பாதையிலே பார்த்து
நடக்கனும் காளைகளே
பழைய போக்கில் பயனில்லை நல்ல
விஷய மிருக்கனும் மூளையிலே''.

**XIII. பின்வரும் பகுதியைப் படித்து கொடுத்துள்ள வினாக்களுக்கு விடை தருக :**

**(2 × 2 = 4) 1 × 4 = 4**

43. உயிர்வாழ்க்கைக்கு அடிப்படையாக இருப்பது இயற்கை. நம் உணவு, உடை, உறையுள், உயிர் எல்லாம் இயற்கை தந்த கொடையே. இயற்கை வளங்களை அழித்து சிதைத்தால் நாளடைவில் அவை முற்றிலும் அழிந்து போகும் எனவே மக்கள் இனமாகிய நாம் நம்மை அழியாமல் காப்பாற்ற வேண்டுமென்றால் இயற்கை வளங்கட்டு அழிவு நேராமல் காப்பாற்றியே தீர வேண்டும்.

**வினாக்கள் :**

a) உயிர் வாழ்க்கைக்கு அடிப்படையாக இருப்பது எது ?

b) மக்கள் எதை அழியாமல் பாதுகாக்க வேண்டும் ?

**XIV. மடல் எழுதுக :** **1 × 5 = 5**

44. உன் பள்ளியில் சுற்றுலா சென்றதை நினைவு கூர்ந்து உன் நண்பனுக்கு கடிதம் வரைக.

*அல்லது*

இளைஞர்கள் வேலை வாய்ப்பு பெற தொழிற்சாலைகள் அமைத்துத் தருமாறு மாவட்ட ஆட்சித் தலைவருக்கு கடிதம் எழுதுக.

**XV.** <u>கொடுக்கப்பட்டுள்ள தலைப்புகளுக்கு ஏற்றவாறு இருபது வரிகளுக்கு குறையாமல் கட்டுரை எழுதுக :</u> **1 × 5 = 5**

45. ''இன்றைய வாழ்வில் ஊடகங்களின் பயன்கள்''

*அல்லது*

''நான் விரும்பும் திருவிழா''.

DO NOT WRITE ANYTHING HERE